24-03-2025.
S.C.No.11/2021

Crl.M.P.4465/2023 மனுவானது 11.12.2023ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் அ.சா.2 அழகர்சாமி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.
Accused present.
எதிரி குறுக்கு விசாரணை

இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி என் உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். சம்பவத்தின்போது நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் அங்குதான் இருந்தேன். நாங்கள் அனைவரும் சேர்ந்துதான் எதிரி வீட்டிற்கு சென்றோம் என்றால் சரிதான். சம்பவம் நடந்தபோது அங்கு கூட்டம் கூடியது என்றால் சரிதான். நாங்கள் எதிரி வீட்டிற்கு சென்று வீட்டிற்கு வெளியே நின்றுகொண்டு சத்தம்போட்டு கூப்பிட்டபின்னர்தான் எதிரி வீட்டிற்குள் இருந்து வந்தார் என்றால் சரிதான். நாங்கள் சென்றபோது எங்கள் குடும்பத்தினரை தவிர பொதுவான ஆட்களை கூட்டிச்செல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் எதிரி வீட்டிற்கு போகும்போதே சண்டைபோடவேண்டும் என்ற நோக்கத்தில் சென்றதால்தான் பொதுவான ஆட்களை கூட்டிச்செல்லவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் எதிரி வீட்டிற்கு சென்று சண்டை போட்டது மட்டுமல்லாமல் எதிரி வீட்டில் இருந்த பீரோ, கட்டில், டிவி ஆகியவற்றை சேதப்படுத்தி தீவைத்தோம் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் கூட்டம் அதிகமாக இருந்ததால் எதிரிதான் என் சகோதரரை குத்தினார் என்றால் சரியல்ல. எதிரிதான் குத்தினார். இறந்த நபர் எனது சகோதரர் என்பதாலும், எதிரிக்கும் எனக்கும் ஏற்கனவே பைக்கில் வந்தபோது சண்டை ஏற்பட்டதாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தி அரையடி நீளம் இருக்கும் என்றால் சரிதான். இந்த சம்பவத்திற்கு முன்னால் எதிரிக்கும் இறந்துபோன சகோதரர் கிருஷ்ணமூர்த்திக்கும் எந்தவித முன்பகையும் இல்லை என்றால் சரிதான். என் சகோதரருக்கு மது அருந்தும் பழக்கம் உண்டு என்றால் சரிதான். அன்றைய தினம் மதியவேளையில் நான் பைக்கில் சென்றபோது எனக்கும் எதிரிக்கும்

சாதாரண வாய்த்தகராறு என்றால் சரிதான். அதன் பிறகு எதிரி என்னை வந்து பார்த்து சண்டை எதுவும் போடவில்லை என்றால் சரிதான். சாதாரண சண்டைக்கு நாங்கள்தான் எதிரி வீட்டுக்கு சென்று எங்களுக்குள் ஏற்பட்ட தள்ளுமுள்ளில்தான் நாங்கள் வைத்திருந்த ஆயுதம் பட்டுத்தான் என் சகோதரர் கிருஷ்ணமூர்த்தி இறந்தார் என்றால் சரியல்ல. நான் போலீசார் சொல்லிக் கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.03.24 17:00:24 +0530

Principal District Judge,
Dindigul.